இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 36 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஆவணி 30 – திங்கள்கிழமை 15 செப்டம்பர் 2025 – வெளியூர் 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 36 : Thiruvalluvar Year - 2056 - Aavani 30 - Monday 15 September 2025 - Dak 16 Pages ₹ 5.00



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.9.2025) கிருஷ்ணகிரியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் 2,052 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கிய நிகழ்வில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கி, அவர்களுடன் உரையாடினார். இந்நிகழ்வின்போது, உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் கே.கோபிநாத். சட்டமன்ற உறுப்பினர்கள் டி.மதியழகன், ஒய்.பிரகாஷ், டி.ராமச்சந்திரன், மேயர் எஸ்.ஏ. சத்யா, மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

## பொய்களைப் பரப்புவதும், களங்கம் கற்பிப்பதும்தான் பழனிசாமியின் அரசியல்! சொல்லாத வாக்குறுதிகளையும் சேர்த்து

# தி.மு.க. ஆட்சியில் எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றம்!

## கிருஷ்ணகிரியில் நலத்திட்ட உதவிகள் வழங்கி முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமித உரை!

**கிருஷ்ணகிரி, செப். 15 -**

**பொய்களைப் பரப்புவதும், களங்கம் கற்பிப்பதும்தான் பழனிசாமியின் அரசியல் என்றும், சொல்லாத வாக்குறுதிகளையும் சேர்த்து தி.மு.க. ஆட்சியில் எண்ணற்ற திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்றும், கிருஷ்ணகிரியில் நலத்திட்ட உதவிகள் வழங்கி உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.9.2025) கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி, ஆற்றிய உரை வருமாறு :-

இரும்பின் தொன்மையை நிறுவ உதவிய மயிலாடும்பாறை அகழாய்வு நடந்த வரலாற்றுப் பழமையும், புகழும் கொண்ட கிருஷ்ணகிரி மாவட்டத்தில், இந்த சிறப்பான நிகழ்ச்சியை ஒரு மாபெரும் மாநாட்டைப் போல் ஏற்பாடு செய்திருக்கிறார் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர் நம்முடைய அருமைச் சகோதரர் சக்கரபாணி அவர்கள். பெயரைப் போலவே இனிமையானவர் சக்கரபாணி. கொடுக்கப்பட்ட வேலையை, எடுத்த வேகத்தில் முடித்து காட்டுவதுதான் அவருடைய ஸ்டைல்!




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.9.2025) கிருஷ்ணகிரியில் நடைபெற்ற அரசு விழாவில், 270 கோடியே 75 இலட்சம் ரூபாய் செலவிலான 193 முடிவற்ற பணிகளை திறந்து வைத்து, 562 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 1,114 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர. சக்கரபாணி, நாடாளுமன்ற உறுப்பினர் கே.கோபிநாத், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.மதியழகன், ஓய்.பிரகாஷ், டி.ராமச்சந்திரன், மேயர் எஸ்.ஏ. சத்யா, மாவட்ட ஆட்சித் தலைவர் ச.தினேஷ் குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**நான்கரை ஆண்டில் 6 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல்!**

கடந்த அதிமுக ஆட்சியின் 10 ஆண்டு கால நெல் கொள்முதலை விட நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், கடந்த நான்கரை ஆண்டு காலத்தில் 6 இலட்சம் மெட்ரிக் டன் அதிகமாக நெல் கொள்முதல் செய்து, தொடர்ந்து தரமான அரிசி வழங்கி, இந்தியாவிலேயே எங்கும் இல்லாத அளவுக்கு, 7 இலட்சத்து 33 ஆயிரம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட, மேற்கூரையுடன் கூடிய நெல் சேமிப்புத் தளங்கள் கட்டி, நெல்லைப் பாதுகாப்பாக சேமித்து வைத்து சிறப்பான பணியை நிறைவேற்றித் தந்தவர் நம்முடைய அமைச்சர் சக்கரபாணி அவர்கள். அவருக்கு என்னுடைய பாராட்டுக்கள், வாழ்த்துகள்.

அதேபோல், இந்த மாவட்டத்தின் மக்கள் பிரதிநிதிகளாக நம்முடைய அன்பிற்குரிய பிரகாஷ் அவர்களும், மதியழகன் அவர்களும், ராமச்சந்திரன் அவர்களும், அதே போல், இங்கு அமர்ந்திருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர் அவர்களும் மிகச் சிறப்பாக செயல்படக் கூடியவர். எப்போதும் என்னை சந்திக்க வந்தாலும், அவர்கள் இந்த மாவட்டத்திற்கான கோரிக்கைகளை வழங்குவார்கள். வழங்குவது மட்டுமல்ல, அதை நிறைவேற்றிக் கொண்டுதான் செல்வார்கள்.

அதேபோல், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு நான் வந்தவுடன், அமைச்சரும் சரி, மக்கள் பிரதிநிதிகளும் சரி, மாவட்டம் எப்படி இருக்கிறது என்று கேட்டவுடன் அவர்கள் ஒட்டு மொத்தமாக சொன்னது நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்குமார் அவர்கள் மிகச் சிறப்பாக செயல்படுகிறார் என்று சொன்னார்கள். அவருடைய செயல்பாடுகளுக்கு இன்று உதாரணமாக 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட பயனாளிகளே சாட்சியாக உள்ளார்கள்.

**கழக ஆட்சியில் கிருஷ்ணகிரி மாவட்டத்தின் வளர்ச்சி!**

அதேபோல், அவருக்கும் மாவட்டத்தின் அனைத்துத் துறை அலுவலர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கிருஷ்ணகிரி மாவட்ட வளர்ச்சிக்கான அடித்தளங்கள் எல்லாம், தி.மு.க. ஆட்சியில் போடப்பட்டது! இரண்டாம் சிப்காட் வளாகம் தொடங்கி, ஒசூர் - போச்சம்பள்ளி மின் நிலையங்கள் விஸ்வநாதபுரம் ஐ.டி. பூங்கா ஒசூரில் மின்னணு தொழில் வளாகம் என்று என்னால் மிகப் பெரிய பட்டியலையே போட முடியும்!

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

---

### பெற்றோரை இழந்த குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில்

# “அன்புக்கரங்கள்” திட்டம்! முதல்வர் இன்று தொடங்கி வைக்கிறார்!

## பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியைத் தொடர மாதம் ரூ.2,000 உதவித்தொகை!

**சென்னை, செப். 15 -**

**பெற்றோரை இழந்த குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில் அக்குழந்தைகள் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர மாதம் ரூ.2,000 உதவித்தொகை வழங்கிடும் “அன்புக்கரங்கள்” திட்டம் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (15.09.2025) தொடங்கி வைக்கிறார்.**

ஏற்றமிகு தமிழ்நாட்டை உருவாக்கிட, குழந்தைகளின் கல்வி மற்றும் அவர்களின் சீரான வளர்ச்சிக்கு தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகின்றது.

மிகவும் வறுமையில் வாழும் குடும்பங்களை அடையாளம் கண்டு அவர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு அரசின் “தாயுமானவர்” திட்டத்தின் ஒரு பகுதியாக, பெற்றோர்கள் இருவரையும் இழந்த மற்றும் பெற்றோரில் ஒருவரை இழந்து மற்றொரு பெற்றோரால் பராமரிக்க இயலாத குழந்தைகளை அரவணைத்து தொடர்ந்து பாதுகாத்திடும் வகையில், “அன்புக்கரங்கள்” திட்டம் தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டது.

அக்குழந்தைகளின் 18 வயது வரையிலான பள்ளிப் படிப்பு முடியும் வரை இடைநிற்றல் இன்றி கல்வியை தொடர, மாதம் 2,000 ரூபாய் உதவித்தொகை வழங்குவதுடன், பள்ளிப்படிப்பு முடித்த பின்னர் கல்லூரிக் கல்வி மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அவர்களுக்கு வழங்க வழிவகை செய்யும் இத்திட்டத்தினை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.9.2025 அன்று சென்னை, கலைவாணர் அரங்கத்தில் தொடங்கி வைத்து, குழந்தைகளுக்கு உதவித் தொகையினை வழங்கவுள்ளார்கள்.

மேலும், பெற்றோர் இருவரையும் இழந்து 12ஆம் வகுப்பு முடித்து, பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களில் தமிழ்நாடு அரசின் முயற்சியால் சேர்க்கப்பட்டுள்ள மாணவ / மாணவியர்களுக்கு மடிக்கணினிகளும் அன்றைய தினம் வழங்கவுள்ளார்கள்.

---

# தமிழ்நாட்டில் 20ஆம் தேதி வரை மழை!

## சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்!




சென்னை, செப்.15 -

தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது. இதன் காரணமாக 20ந்தேதி வரை தமிழகத்தில் ஒரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஈரோடு, கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர், சேலம், வேலூர், ராணிப்பேட்டை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, கடலூர், விழுப்புரம், அரியலூர், பெரம்பலூர், மயிலாடுதுறை மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கனமழை பெய்யவாய்ப்புள்ளது.